**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.80/2025**

**நாள் : 06.04.2026**

**எ.ம.சா.** 1 (2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.மருதாச்சலம் | மாவட்டம் | : | சேலம் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.கோவிந்தராஜ் | வயது | : | 32 |
| ஊர் | : | மேட்டூர் | தொழில் | : | இளநிலை உதவியாளர் |
| வட்டம் | : | மேட்டூர் | தேசியம் | : | இந்தியன் |

நான் திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து திருப்பத்தூர் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்று 18.11.2025தேதியிட்ட அதிகாரமளிப்பு கடிதத்தின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். அதிகாரமளிப்பு கடிதம் **எ.ம.சா.ஆ.1.**, மேற்படி அழைப்பாணையில் பணிக்கப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

அழைப்பாணையில் செல்லதுரை, த/பெ.சீனிவாசன், 202/2, பெரியார் வட்டம், குனிச்சி, திருப்பத்தூர் மாவட்டம் என்ற நபரின் ஓட்டுநர் உரிமத்தை சமர்ப்பிக்குமாறு பணிக்கப்பட்டிருந்தது. எங்களது அலுவலகத்தில் உள்ள ஆவணங்களை தேடிப்பார்த்ததில் செல்லதுரை என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இதுநாள் வரை வழங்கப்பட்டதாக தெரிய வரவில்லை. ஓட்டுநர் உரிமம் தேடுதலுக்கான கணினி நகல் **எ.ம.சா.ஆ.2.**

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எனது அலுவலகத்தில் உள்ள 2012 முதல் நாளது தேதி வரையிலான ஆவணக்கோப்புகளை தேடிப்பார்த்ததின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். 2012க்கு முந்தைய கால கட்டத்தில் வாணியம்பாடி வட்டார போக்குவரத்து அலுவலகம் மட்டுமே செயல்பாட்டில் இருந்தது என்றால் சரிதான். அதேபோல் செல்லதுரை நேரடியாக மனுதாக்கல்க செய்து கணினி மயக்கப்படுவதற்கு முன்பே ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். மேற்படி செல்லதுரை, வாணியம்பாடி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளரா என்பது பற்றி எனக்கு தெரியாது. நான் ஆவணங்களை முறைப்படி பரிசீலிக்காமல் ஜமுனாவுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**நீதிமன்ற அனுமதியுடன் மறுவிசாரணை –**

2012–க்கு முன்பே ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தாலும் அதனை Renewal செய்திருக்ககூடும் என்றால் சரிதான். அவ்வாறு செல்லதுரை Renewal செய்திருந்தால் அதைப்பற்றி தெரிய வந்திருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு Renewal செய்யாதபட்சத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லாததாகதான் கருதப்படும் என்றால் சரிதான்.

**மறுகுறுக்கு விசாரணை –**

எ.ம.சா.ஆ.2–ல் No Search Details Found என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர No D.L என்று குறிப்பிட்ப்படவில்லை என்றால் சரிதான். செல்லதுரையின் பெயர் மற்றும் அவருடைய தகப்பனார் பெயரைக் கொண்டு தேடினோம். தகப்பனார் பெயர் சம்மனில் உள்ளது. சில சமயங்களில் தகப்பனார் பெயர் spelling மாற்றி

போட்டாலும் தேடுதலில் அகப்படாது என்றால் சரிதான். எனது தேடல் முறைப்படியானது அல்ல என்பதால்தான் எந்த விவரமும் கிடைக்கவில்லை என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.